ஓலை 50 | ஓசை 169 | நளி (நவம்பர்) 2023

அகழும் தமிழே!
முதலும் தமிழே!!

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

அகர முதல
உரக்க சொல்வோம்

# அறிவோம் வள்ளுவம்!



**கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன் றுள்ளக் கெடும்**

முன்பு நன்மை செய்தவரே பின்பு நம்மைக் கொலை செய்வது போன்ற தீமையைச் செய்தாலும் அவர் முன்பு செய்த ஒப்பற்ற நன்மையை நினைத்த அளவில் அத்தீமை மறையும்.

**Translation:**

Effaced straightway is deadliest injury,
By thought of one kind act in days gone by.

**Explanation:**

Though one inflict an injury great as murder, it will perish before the thought of one benefit (formerly) conferred.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்

### அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# வழக்கில் ஓரம் சொன்னவர் மனைபாழ்

பா வகை : நூற்பா

உண்மை உரைத்து உயர்ந்து நில்
ஓரம் பேச ஒழியும் மதிப்பு
பொய்யின் கோட்டை ஓட்டை தானே
நடுநிலை நிற்பதே நாவின் சிறப்பு
ஆய்ந்து அறிந்து நேர்மை போற்று
வாக்கின் தூய்மை வழக்கில் காட்டு
பிழைபடா தீர்ப்பு பீடாய் வரும்
சார்பிலா மெய் தாங்குமே என்றும்



கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# குறுங்கவிதைகள்

இதுவா அதுவா எது இலக்கணம்
நீயா நானா யார் பெரியவர்
மனிதருள் தொலைந்து போகும் நிதானம்
வாழ்க்கை வெற்று மைதானம்
*

சாய்கோடாய் இறங்கும் மழைக் கம்பிகள்
சரசரவெனச் சறுக்கி வரும் வெண்ணிலா
மண்ணில் நிறைந்த குட்டி வானங்கள்
இணைபிரியாத நிலவும் வானமும்
*



அலையாய் மடிந்து வரும் கடல்நீர்
உப்புத் தழுவலில் ஊறும் கால்கள்
எங்கோ மலர்கிறது உயிர்பூ ஒன்று
மெல்ல நகர்கிறது நத்தை
*

சின்னச் சிட்டுக்குருவி எட்டிப் பார்க்கிறது
வயலில் முற்றா நெல்மணிச் சரங்கள்
நீர்வரத்துக்காய் காத்திருக்கும் வயல்வெளிகள்
என்றாவது நெல் முற்றும்

கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜூ ,பட்டாபிராம், சென்னை

# சேர்ந்தாரைக் கொல்லும் சினம்

இயலாமையால் வருவதே
இன்னலூட்டும் சினம்.

சினம் வந்திட
சிறப்பெல்லாம் போம்.

மனதினில் தோன்றும்
சினத்தைத் தடுத்திடுக.

வலியவரிடம் சினம்
கொள்ளல் தீதாம்.

மெலியவரிடத்து
சினம் கொள்ளலும்
தீதே!

தன் உவகையைக்
கெடுத்தே இன்னலூட்டும்.

தன்னைக் காத்திடச்
சினத்தை வேரறுத்திடுக.

சினமது உள்ளத்தில்
கனமதைத் தந்திடும்.

உள்ளத்தில் நாளும்
கள்ளத்தை உண்டாக்கும்.

உள்ளியது
யாவும்
உடனெய்தாமல்
செய்திடும்.

இன்னா செய்தாரையும்
மன்னிக்கக் கற்றிடுக.

தன்னோடு அழித்திடும்
தன் இனத்தையும் சேர்த்து.



பலசுடருடைய
நெருப்பு
படர்ந்ததை
அழிக்கும்.

நெருப்பாய்
இருந்தாலும்
அதை அணைத்திடுக.

அன்பால்
அணைப்பது
அனைவரையும்
ஈர்க்கும்.

இன்னா செய்தார்க்கும்
இனியவே செய்க.

இனியவே
செய்தால்
சினமது
அழியும்.

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# நீயே குளிர் மேகம்

விட்டுவிட்டுப் பெய்கிறாய்
தொடர்ச்சியாக பெய்தால்
எனது கண்களின் தாகம் தீரலாம்

ஒரு கோடை காலத்தை
உன்னால்தான் மாரிகாலமாக்க முடியும்

எனது வெய்யில் ஒரு கடல்போல
விரிந்து பரவுகிறது

ஒரு குளிர் மேகமாக வா
எனது பூமி வேர்த்திருக்கிறது




கவிஞர் ராஜகவி

# காதல் காற்று வீசும் நேரம்

காதலால் கனிந்தேன்
அன்பினில் கலந்தேன்
நேசத்தில் நெகிழ்ந்தேன்
நெருங்கிட மகிழ்ந்தேன்

பாசத்தைப் பகிர்ந்தேன்
பாங்காய் இணைந்தேன்
தனிமையை மறந்தேன்
தண்ணொளியில் குளிர்ந்தேன்



அழகினை இரசித்தேன்
இதயத்தில் களித்தேன்
அமுதத்தைச் சுவைத்தேன்
அள்ளியேப் பருகினேன்

மூச்சினில் கலந்தேன்
முக்கடலில் குளித்தேன்
மங்கையுனை நினைத்தேன்
மகிழ்ச்சியில் திளைத்தேன்

உள்ளத்தால் உருகினேன்
உணர்வுகளால் உயிர்த்தேன்
பஞ்சானாய் நெருப்பானேன்
அரவணைத்தாய் மெழுகானேன்

பூத்திட்டாய் மணமானேன்
கூந்தலில் சரமானேன்
கற்பனையில் கவிஞனானேன்
காரிகைக்குக் காதலனானேன்

இளமையை மீட்டினேன்
சுரங்களை இசைத்தேன்
நிழலாய்த் தொடர்ந்தேன்
நின்னையேச் சரணடைந்தேன்

காதல் காற்றானேன்
வீசும் நேரமானேன்.

கவிஞர் பெ.வெங்கட லட்சுமி காந்தன்,விருதுநகர்

# ஏகாந்தமாய்

மலை
இடுக்கில் வடியும் அருவி
நீரில்
முகம் பார்க்கும் ஆகாயம்
வேட்டை
தாகம் தணியாத காட்டுராஜா
பிரபஞ்சத்தை
அணைக்கும் இருட்டு
சொல்லாமல்
வெளியேறும் காட்டுப் புகை
வேடன்
அம்பிற்கு தப்பித்த ராஜாளி
நிறங்கள்
உடுத்திய வானவில்
பசிக்கு
தூண்டிலில் சிக்கிய மீன்
புறம் சொல்ல
யாருமற்ற புல்வெளி
ஒப்பனையில்
ஏகாந்தமாய் அவள்




கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# செல்லக் கிளியே!

சுற்றத்தாரும் உற்றத்தாரும் வியக்கும் அளவு
சுதந்திரமாக உன்னை நான் வளர்த்தேன்
உன்னை கூடுகளில் நான் அடைக்கவில்லை
உன் சிறகுகளையும் நான் உடைக்கவில்லை

உண்மையான அன்பினை அள்ளித்தந்தேன்
உனக்கு பிடித்தாற்போல் சுற்றித்திரிய விட்டேன்
என்னுறவாக உன்னை நான் மதித்தேன்
என்னுயிராக உன்னை நான் உணர்ந்தேன்



தூய்மையாக உன்னை நான் வளர்த்தேன்
துன்புறுத்தாமல் உன்னை பாதுகாத்தேன்
வளமைப்போல் பறந்து திரிந்த நீ
மாலையானதும் ஏன் வீடு வரவில்லை

சுற்றும் முற்றும் விசாரித்துப் பார்த்தேன்
உன்னை பற்றிய தகவல் ஏதுமில்லை
உன்னைத் தேடிப் பார்த்தேன் நீ கிடைக்கவில்லை
வேதனை சூழ்ந்ததால் கவலையில் மூழ்கினேன்

நீ இறந்து விட்டிருப்பாய் என்றனர் பலர்
நீ உயிரோடு இருக்க பிரார்த்திக்கிறேன் நான்
உனக்காக காத்துக் கிடந்து காலமாகிவிட்டது
உனைக்காணும் ஆவல் மிகுதியாகிவிட்டது

என்னை மரணம் அழைக்க முன்னே
என்னிடம் வந்துவிடு நான் வளர்த்த செல்லக் கிளியே!

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் இலங்கை

# அன்பெனும் ஆயுதம்

ஆழமான அன்பு
அபரிதமான அக்கறை
இல்லை என்று சொல்லாது
முடியாதென்று தள்ளாது
தப்பு கண்ணுக்குத் தெரியாது
தவறை சுட்டிக் காட்டாது
கேட்டதைக் கொடுத்து விடும்
கேளாமல் எல்லாம் செய்யும்
நம்பிக்கை வைத்த அன்பு
பழி ஏற்றுக்கொள்ளத் தயங்காது
கைத்தவறி விழுந்து விட்டால்
கண்ணாடி விரிசலாய்
இரண்டாகப் போய்விடும்
நெஞ்சைக் கிழித்து
குருதி கொட்டும்
அன்பே ஆயுதமாக மாறி
ஆயுளை முடித்துவிடும்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# இதயம் வருடும் அன்பே

நினைவுகளோடு வாழ ஆரம்பித்து விட்டேன்
ஒவ்வொன்றும் நம்மோடு கதை பேசும்
என்னவன் இதயத்தில் ஒலிக்கும் ஓசை
என்னுள்ளே தட்டி எழுப்பிட செய்யும்
கண்ணில் தெரியும் காதல் மொழி
வா வா என அழைக்கும்
உன்னை பார்த்த நாள் முதல்
நான் நானாக இல்லை விழியோர
நிழலில் வந்து செல்கிறாய் தினமும்
விழித்தால் கண் முன் நிழலாடுகிறாய்
அலைகளுக்கு ஓய்வு உண்டு எனினும்
இதயத்திற்கு ஓய்வு இல்லை அன்பே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்,நாகர்கோவில்

# என்னவன்

என்னவன் முன்பு எவரும் அழகில்லை
அவன் அழகை வைத்து ஆணவம் கொள்வேன்

அவன் திறமையை வைத்து கர்வம் கொள்வேன்
நான் கற்பனையில் வடித்த உருவம் அவன்

கலைமகனின் விம்பம் அவன்
நான் காலையில் முகம் பார்க்கும்
கதிரவன் ஒளி அவன்

அரிய வகை மலர்களின் அம்சம் அவன்
மகரந்தமேனியின் வாசம் அவன்



நான் புரட்டிய புத்தகம் அதிகம்தான்
புரட்டி புரட்டி படித்து படித்து
இன்னும் முடிவு பெறாத புத்தகம்
அவன் மட்டும்தான்

அவனை ஒருமுறைதான் பார்த்தேன்
பலமுறை படிக்கிறேன்

சிறிய திமிரையும்
சின்னஞ்சிறு அழகையும் வைத்துக்கொண்டு
என்னோடு ஆணவத்தோடு பேசாதீர்கள்

எனக்கு அவன் ஞாபகம் வந்துவிடுகிறது
அவன் முன்பு எதுவும் பெரிதில்லை.

கவிஞர் சாதீக் பாத்திமா சம்ஹா,மூதூர்

# என் தாய்

அவள் அன்புக்கு வரிகள் தேவையில்லை
அவள் அன்புக்கு உருவம் தேவையில்லை
அவள் அன்புக்கு உணர்வுகள் போதும்

அவளின் சிரிப்புக்கு பின்னால்
பல கஷ்டங்கள் இருந்த போதும்
அவள் சிரிப்புக்கு பின்னால்
பல கவலைகள் இருந்த போதும்

தன் பிள்ளை
நஷ்டப்படக்கூடாது கஷ்டப்படக்கூடாது
கவலைப்பட கூடாது என்பதற்காக

ஒவ்வொரு நிமிடமும்
ஒவ்வொரு மணித்தியாலமும்
ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு வருடமும் எனக்காக

எண்ணில் அடங்காத
தியாகங்கள் செய்தவள் என் தாய்
ஆசைகள் பல அவள் உள்ளத்தில் இருந்த போதும்
நான் ஆசையாய் கேட்பதை வாங்கித் தருவாள்

என்னை அலங்கரித்து அவள் ரசிக்க
அவள் அழகாக உடுத்ததை நான் பார்த்ததில்லையே!
சுவையான உணவு மூன்று நேரமும் நான் சுவைக்க
அந்த உணவின் சுவைக்கு பின்னால்
அவள் பட்ட கஷ்டம் அவ்வளவு

அவளுக்கு நான் இளவரசி
எனக்கு என் தாய் ராணி
தோல்விக்கு பின்னால்
வரும் வெற்றி மிகப் பெரியது

ஒரு தாய்க்கு
தன் குழந்தை
அவளின் உயிருக்கு பார்க்க பெரியது



கவிஞர் சபியா பானு,கம்பஹா

# வெண்மையின் ஒற்றைப்பூ


உனக்குப் பிடித்தமானவர்கள்
உன்னைக் கொண்டாடுபவர்கள்
உன்னிடம் பிரியம் கொண்டவர்கள்
உன்னைப் பெருஞ்சொந்தமென
ஏற்றவர்கள்
உன்னைப் பெருஞ்சொத்தென நினைப்பவர்கள்
உன்னை நினைக்கும் போதெலாம் புன்னகை பூப்பவர்கள்
உனைப் பெரிய பலமென எண்ணிக்கொண்டவர்கள்
இப்படி.
யார் உன் நெஞ்சுக்குழிக்குள் உட்கார்ந்து
பேருவகையின் இன்பத்தேனைக்
குழைத்து வழிந்தோடச் செய்கிறார்களோ
அவர்களைத் தவிர
வேறு யாரும் வேறு எதுவும்
உலகில் அழகே இல்லை
உன் கண்களுக்குள்
அழகிய சாம்ராஜ்யம் அமைத்து
அமைதியாக உன்னைக்
கைப்பற்றியவர்கள் அவர்கள்.
உனக்குள் அவர்களும்
அவர்களுக்குள் நீயும்
அடங்கிக் கிடப்பது
நேசத்தின் நீட்சியன்றி
வேறென்ன?
அந்நேசம் சாத்வீகமெனும்
வெள்ளையாடை தரித்த
ஒற்றைப் பூவாக
நறுமணம் வீசிக்கொண்டிருக்கிறது.



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# உடன் பிறவா உறவே

கருவில் சேர்ந்தவர்கள் இல்லை நாம்
நெஞ்சில் இணைந்தோம் நெஞ்சாத்தி வழியாக
உன்னில் நானும் என்னில் நீயும் உணர்வில் உறவானோம்
பரவசம் தொற்றிக் கொள்ள கலகலக்கிறோம்
நேரம் கடந்து தூக்கம் மறந்து
நேசம் பாசம் சேர இரத்தம் எதற்கு
இதயம் ஒன்று துணையானது நமக்கு
நீ எங்கோ நான் எங்கோ
விழிகள் காணா தூரம் செவிகள் கேட்கா வண்ணம்
இறைவனும் எம்மை படைத்து இருக்கையிலே
இன்று எம்மை சேர்த்து வைத்தானே
இணையத்தின் வழி ஏன் எதற்கு என்றல்லாத பாசம்
அன்பே நான் உன்னில் உணர்கிறேன்
எனக்கான பாசத்தையும் நேசத்தையுமே
தாண்டிய ஏதொரு பிணைப்பை
யாரென்று அறியாமலே நம்பிக்கை தந்தாயே
நீ வேறு நான் வேறு கருவறையில் பிறப்பெடுத்தாலும்
நம் நெஞ்சில் நிறைந்து சுமக்கிறோம் மாறி மாறி
என்னில் தொலைந்த கலகலப்பை
உன்னால் மீண்டு விட்டெ்ன
இணைய உறவுகள் தோழமை கொடுத்து
காணாமல் சென்று விட
வெறுமையை உணர்ந்து தனிமையை வெறுத்தேன்
நீ வந்த பின் புதிதாக மலர்ந்து விட்ட
முற்றத்து மல்லிகையை போல ஆகினேன்
முகவரி தொலைத்த முகிலினமாய் நானிருக்க
அனலை அணைக்கும் அருவியைப் போ நீயும் ஆகினாய்
வசந்த காற்றாய் நெஞ்சாத்தி தந்த வசந்தம் நீ எனக்கு
இறைவனிடம் கேட்கிறேன் என்றும் நம் பாசம் வேண்டும் என்று
எவர் வந்தாலும் எம் நேசத்தை கொச்சையாக்கா வரம் கேட்கிறேன்
நாங்கள் உடன் பிறவா சகோதரர்களே
உம் பார்வையை நலமாக்கி எம்மை பாருங்கள்
இல்லை என்றால் தவறாகதான் புரிந்திடுவீரே
நம் அரட்டையிலே புலனம் கூட அரண்டு மீளும்
உயிர் மூச்சை தாண்டியும்
சந்ததி சந்ததியாக எம் உறவு தொடர வேண்டுகிறேன்



கவிஞர் சஹ்னாஸ் பேகம்,புத்தளம்(இலங்கை)

# சிலப்பதிகாரம் (இருபது)

2. கண்ணகி கதற, அசரீரி வாக்கு.
வானத்து நிலவு பூமியில் சரிந்ததுபோல் விழுந்தாள் கண்ணகி
மானத்தோடு வாழ்ந்த என் கணவன் கள்வன் ஆனது எஞ்ஞனம்
கானல்வரியானதே, கைம்மைக் கோலம் பூணவா மதுரை வந்தேன்
வானத்தைப் பார்த்து கதறினாள், தகுமா இது? என்னவன் கள்வனா?

மதுரைக்கு வந்த நான் வாழ்வைத் தொலைத்துவிட்டேனே ஐயகோ
இதுதான் பாண்டிய மன்னனின் நீதியா என்று அனற்றினாள்
அதுசமயம் வானிலிருந்து அசரீரி வாக்காக ஒலித்தது,"பெண்ணே
இதுகேள் உன் கணவன் கள்வன் அல்ல, இவ்வூர் தீயினால் அழியும்"

19. ஊர் சூழ் வரி.

1. கண்ணகி மற்றொரு சிலம்பு :
தன்னிடம் உள்ள சிலம்புடன் மதுரை வீதிகள் வந்து சேர்ந்தாள்
என் கணவன் எடுத்துச் சென்ற சிலம்பின் மற்றொரு சிலம்பு இது
முன் செய்த தீவினைப் பயனோ? என் கணவன் கள்வன் அல்லன்
அன்போடு, இளகிய மனதோடு பிறர்வலி போக்க தன்வலி தருவான்



2. மதுரை நகர மக்கள் :
அவள் துயர் கண்ட மக்கள் மீளாத துன்பத்தில் வருந்தினார்கள்
இவளது சோகம் மதுரை மக்கள் இதுவரை கண்டு கேட்டதுமில்லை
இவளால் மன்னனின் செங்கோல் வளைந்து அழிவுக்கு காரணமானது
இவள் கோபத்தில் என்னென்ன தீங்கு வருமோ கலங்கினர் மக்கள்

3. கண்ணகி கோவலன் கொலையுண்ட இடத்தை அடைதல் :
வன்பழி நிகழ்ந்த இடத்தை கண்ணகிக்கு காட்டினார்கள்.
தன்னைப் பார்த்து கதறும் ஓலம் அவனுக்கு கேட்கவில்லை
மென்மையான கண்ணகி, சிதறிய இரத்தம் கண்டு மயங்கினாள்
"என்னுறு துயர்கண்டும் இடர்உறும் இவள் என்னீர்"

அந்தோ பொன்போன்ற உன் உடல் புழுதியில் கிடக்கின்றதே
இந்தக் கோலத்தைக் காணவா பாதம் நோக நடந்து வந்தேன்
சிந்திக்கத் தெரியாத பாண்டிய மன்னன் நீதி தவறி விட்டான்
எந்தப் பாவமும் அறியாத எனக்கு ஏன் நேர்ந்தது இந்த கதி

4.கோவலன் உயிர்பெற்று வருதல் :
மாண்ட கணவன் மார்பை தழுவி அழ, அவன் உயிருடன் வந்தான்
மீண்டு வந்த கணவன் முறுவலில் தன உயிரைக் கரைத்தாள்
காண்பது கனவா அவள் அவன் பாதத்தை கண்ணீரால் கழுவினாள்
மாண்புமிகு கண்களில் வழியும் கண்ணீரை கைகளால் துடைத்தான்

"ஈது என்ன மாயம்" அவள் மருள ,"நீ இங்கு இருக்க நான் போகிறேன்"
பூத உடலை நீங்கி எழுந்து தேவர்கள் புடை சூழ வானுலகம் சென்றான்
ஏது நடந்ததோ அதற்கான் பதிலை மன்னவன் கூறியே ஆகவேண்டும்
தீது உரைத்த அரண்மனை வாயிலை நோக்கிச் சென்றாள் கண்ணகி .

தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# உழைப்பு உயர்வு!

உழைப்பு உலகினில்
உன்னதச் சிறப்பு
களைப்பு அதனை
நீக்குதலே அன்பளிப்பு.

விதிஎது கேட்டு
மதியதைக் கொண்டு
பதியங்கள் மனதிலிட்டே
ஆதியிலிருந்தே தூய்மையாக்கலாம்.

மதித்தே வாழலாம்
மிதித்தாலும் எழலாம்
அன்பை விதைத்தால்
அன்றன்றும் உயர்வு.



கவிஞர் இரஜகை நிலவன்,மும்பை



அகர முதல

# விதி வழி வாழ்க்கை

இழப்புகள் கண்டு
இதயம் நொந்து போகாதே
இறைவனின் நாட்டப்படி
எல்லாமே நடக்கும்



எதிர்கொண்டு வாழ்
உன் எதிர்பார்ப்புகள்
வெற்றியின் எல்லை சென்று
தோல்வியில் முடியலாம்

தோற்றுப் போனேன் என்று
சோர்ந்து விடாதே
இதுவும் கடந்து போகும்
மீண்டும் கனவுகள் நனவாகும்

விளை நிலத்தில்
விதைத்தவை யாவுமே
தளிர்த் தெழுந்ததில்லை
கனி தருவது மில்லை

இங்கு நடப்பவை யாவும்
உனது நன்மைக்கே
அதுவரை மனமுடைந்து
நம்பிக்கை இழந்து விடாதே

உனக்கென நிச்சயிக்கப்பட்டவை
உன்னை அடைந்தே தீரும்
நாட்கள் கடந்தாலும்
நாளைய பொழுது உனதாகும்

தொடுவானம் தொடும்
தூரத்தில் இல்லை
விதியை நொந்து நீ
மதியை இழந்து விடாதே

கவிஞர் செண்பகச் சோலையாள்,ஆய்ஷ்(இலங்கை)

# வாழ்க்கையே வெறுப்புதான்

என்னடா உலகம் ஏன் பிறந்தோம் நாம் இந்த கழகம்
காலத்தின் பிம்பம் மாற்றத்தின் துன்பம்
மாறுதே வாழ்க்கையின் பின்னணி கர்மம்
முடியவில்லை வாழ்க்கையை முற்போக்கு
முரண்படுதே தினம் நாள் போக்கில்
யாரும் யாருக்கும் உதவுவதும் இல்லை
துணை துணையும் துணைக்கும்  நிற்பதும் இல்லை
தூண்டில் போட்ட மீன் போல் மின்னுதே நம் வாழ்க்கை தினம்
ஒப்பாரி பாடலும் ஒய்யார நாட்டத்தில்
நடமாடுகிறோம் நம் வீதி தோட்டத்தில்
சொப்பனங்கள் ஏராளம் சொர்க்கம் தாராளம்
சொல்ல முடியாத துயரங்களும் துன்பங்களும்
தாராள மண்ணுலகம்
என்னடா வாழ்க்கை ஏன் பிறந்தோம்?
எதற்கு பிறந்தோம்? எதற்கு வளர்ந்தோம்?
யார் யாருக்கோ யாரோ நாம் நமக்கே இருக்கும் வரை
முதலும் முடிவும் நாமே முன் அறிவு தெய்வமும் நாமே
புரிந்து கொள்வோம் வாழ்க்கையை
அறிந்து கொள்வோம் அறிவு தாட்கையை.



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# என் சிறகின் உந்துதல்

உயரப் பறக்கிறேன்
தலை உயர்த்தி சிறகசைத்து
உறுதியோடு.
மோதிச்செல்லும் காற்றை கிழித்து
முனைப்போடு முந்தி செல்கின்றேன்
தொலைதூரத்தில்
அரை நிலவாய் ஒருபிம்பம்.
வறண்ட நாவோடு,திறந்த வெயில்
ஓர் தனிமை பயணம்.
தொட்டுவிடும் தூரம்
தொலைவில் இல்லை.
உள்ளுக்குள்ள உறங்காத
ஓர் உத்வேகம்.



கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

# இங்கு அன்பு தேவை

நான் பேச நினைக்கும் வார்த்தைகளை கேட்பதற்கு

நான் பேசாமலே என்னருகில் மௌனமாய் அமர்வதற்கு
எந்தன் தேடலின் இறுதியாய் நீ இருப்பதற்கு

எந்தன் கவலைகளை உந்தன் புன்னகையால்
கண்ணாடிச் சில்லுகளாய் சிதற வைத்து
அதிலும் உந்தன் புன்னகை காண்பதற்கு.

நடைப்பிணமாய் கிடக்கும் என்னை
நடைப்பயணமாய் உந்தன் வழித்தடத்தில் பயணிப்பதற்கு

தேனீர் கோப்பையின் சுவை முடியும் முன்பே
எந்தன் கவலைகளின் சுவை அறிவதற்கு.

இவையெல்லாம் கிடைத்தால் போதுமே
இந்த பூமியில் நானும் வாழ்வதற்கு.



கவிஞர் ரமேஷ்யோகி & கு.ரமேஷ்குமார்,மதுரை

# அழுகை

அவனியில் பிறப்பதும் அழுகையோடு
அவரவர் இறப்பும் பிறர் அழுகையோடு
அடம்பிடிக்கும் குழந்தையின் அழுகையும்
அரவணைக்கும் அன்னையின் அழுகையும்

அநீதி இழைப்பவராலும் அழுகையுமே
அக்ரமகாரருக்கும் ஒருநாளில் வரும் அழுகையே
அடுத்தவர் சொல்லடி தாங்கா அழுகையுமே

அன்றைக்கு வலியுமே குறைவது அழுகையாலே
அத்தனை பிரச்சனைக்கு தீர்வுமே அழுகையாலே
அகமகிழ்வதும் ஆனந்த அழுகையாலே

அசரீரி பயமும் வெளிப்படுவது அழுகையாக
அட்டூழியம் தாங்காமல் அழுகையாக
அசராத வீரனின் தைரியமும் அழுகையாக

அடிமை மனிதர்களின் அனுதினமும் அழுகையோடு
அடுப்படி கண் எரிச்சல் அழுகையோடு
அடைக்கலம் வேண்டியே இறையிடம் அழுகையோடு



அட்சதை தூவிடும் தாயும் அழுகையோடு
அகால மரணமும் அபார அழுகையோடு
அதிகார வர்க்கமும் பிணி அழுகையோடு

அநியாயம் கேட்க ஆளில்லா அழுகையுமே
அத்தனை அழுகையுமே
அரும்பாடு பட்டு வாழ்வதற்கே!

கவிஞர் நீலா சுபாஷ்

# எனை மாற்றியவளே!

ஆண் என்ற கர்வம் அனைத்தும் உடைந்தது
உன் அடைக்கலம் தேடி மனம் ஏனோ அலைந்தது
கருவறையில் சுமந்தவள் இல்லாத குறை
உன் நெஞ்சகம் புதைய தானே மறைந்தது

மன்மதனாய் நானிருந்தும் மழலையாய்
உன் மடிசாய
மனக் கவலைகள் மறந்தது

உடையாத உன்
மௌனமும் என் சிகைக்கோதும்
உன் விரல்களும் ஆறடியாய் இருக்கும்
எனை ஓர் அடியாய் மாற்றியது

பட்டம் பல பெற்றும் திட்டம் பல வென்றும்
சரித்திரம் போற்ற நானிருந்தும்
உன் கைவளை ஓசையில்
அனைத்துமே மதிப்பற்று போனது



பரபரப்பான வாழ்வில் இன்றுதான்
என்னை உணர்கிறேன்
உன் இதய ஒலி கேட்பதனால்.

கவிஞர் க.இராஜேஸ்வரி கணேசன்,புதுவை

# நடமாடும் நிழல்களாகி

ஏதோவொரு
பழங்கதை பாத்திரமாய் இயக்கப்படுகிறேன்.
சுபாவங்கள் அரைத்த கரும்பின் தும்பாகின்றன.
வேறொரு பாத்திரத்தில் ஊற்றப்படுபவனாகிறேன்.
வார்க்கப்பட்ட அச்சுகளுக்கேற்ப
வினைநிகழ்த்துகின்றன புலன்கள்.
ஆனாலும் மனம் குப்பைக்கோழியாய்
எதையோ கிளறியவாறிருக்கிறது.
உண்ணலும் உறங்கலும் தின்னலும் கழித்தலும் நிகழ்கின்றன.
தன்னிச்சைச் சுழலுக்குள் சிக்கிய தினசரிகளில் கட்டுண்டு.
ஒளிதேக்கிய புகைப்படம் போலவோ
நிறம் தீட்டிய ஓவியம் போலவோ பலவந்தப்படுகிறேன்.
எந்திரங்களைப்போல இரைந்து ஓய்கிறேன்.
ஆகச்சிறந்த எனக்கான வாழ்க்கையைக் காண
கொக்கொக்க கூம்பி நின்றும் பறந்தும்
திசையெங்கும் அவாவி அளாவும்
நடமாடும் நிழல்களாகிறேன்.



கவிஞர் அ.எபநேசர்அருள் ராஜன்,சொக்கநாதன்புத்தூர்

# எதிர்காலக் கனவுகள்

தமிழென்னும் ஓர் மொழியே என்றும்
தரணியில் தவழ்ந்திட வேணுமடி
தாய்மை நிலை மாறா அன்பு
என்றும் உள்ளமதில் தங்கிட வேணுமடி
எண்ணமதில் எதிலும் குழம்பாத
நல்வழி போதுமடி

கன்னம் கிள்ளும் ஆசை
குழந்தை என்றும் போதுமடி
குயில்கள் பாட்டு எழுந்திட கேட்கும்
பொழுதுகள் வேணுமடி
பொன்வானம் மேலே பறந்திடும்
பருந்தாய் தொலை நோக்கமும் வேணுமடி

இந்தியா வல்லரசாகி அனைவரும்
மகிழ்ந்திட வேணுமடி
முன்னவர்கள் செய்த தவறினை நாம்
செய்யாது விவசாயமதைக் காத்திட வேணுமடி
பண்டமாற்று முறை மீண்டும் மலர்ந்து
மக்களும் செழித்திட வேண்டுமடி



அந்நிய நாட்டுப் பணிதனை துறந்து
அவரவர் நாட்டிலே உழைக்கவும் வேண்டுமடி
இருப்போர் இல்லாதவருக்குக் கொடுத்து
ஆனந்தம் கொள்ளவும் வேண்டுமடி
மரங்களை அழிக்காது நட்டு மனிதம் போற்ற
மாதம் மும்மாரி பொழியட்டுமே

சாதி மதப் பித்து தொலைந்து
சமத்துவமாய் மாறட்டுமே
இவை அனைத்தும் கனவின்றி
நனவாகத்தான் மாறட்டுமே

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# புன்னகை



உன் மனம்
உடைக்கப்படும்
ஒவ்வொரு தருணமும்
நீ உருவாக்கப்படுகிறாய்,
செதுக்கப்படுகிறாய்.

அதனால்,
நன்றி கூற
பழகிக் கொள்வோம்
புன்னகையுடன்
ஏற்று கொள்வோம்

சிந்திக்கும்போது
நிதானமாக சிந்திப்போம்.
செயல்படும்போது
உறுதியுடன் செயல்படுவோம்.

விட்டுக் கொடுக்கும் போது
மனநிறைவுடன் விட்டுக் கொடுப்போம்.

முயற்சியை கைவிடாமல்
இலக்கில் கவனமாய்
இருப்போம்
வெற்றி நிச்சயம்
புன்னகையுடன் பயணிப்போம்

கவிஞர் ஜெ.தேவி ராஜசேகர்,சென்னை

# பெருநகர் – வெள்ளம்

பெருக்கெடுத்து ஓடியது
மழைநீர் அடைக்கலம்
தேடி!

நீர்த்தேக்கம் அடையாளம்
தொலைத்து குடியிருப்பு
கட்டிடமாக நிற்க!
நீர் வடியும் வரை
காத்திருக்கும் சிறுமி!
வருமுன் காப்போம்
வாசகம் சுவரில் !



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ்நாடு

# ஏன் வருகிறது மழைக்காலம்?

பரந்து விரிந்த மாநகர் ஒன்றின்
பேருந்து நிலையத்தின் வாசல்தான் அது
இரவுகள் மெல்ல தூங்கிக் கொண்டிருக்கும் நடுநிசி நேரம்
ஆணும் வேண்டாம்
பெண்ணும் வேண்டாம் என
அர்த்தநாதீஸ்வர் ஆக
அவதாரம் எடுத்தவர்களின்
கூட்டம் தான் அது
அவர்களின் பேருந்தும் வரவில்லை,
அவர்களுக்கு ஒரு மூன்று சக்கர
தேரும் வரவில்லை
சற்று முன்புதான்
வேறொரு இடத்தில் இருந்து
இங்கு நோக்கி தூரத்தப்படுகிறார்கள்
இப்போது
மீண்டும், அறிவிக்கப் படாத
இடத்திற்கு
காக்கிகளால் மீண்டும்
அலை கழிக்கப்படுகிறார்கள்
இவர்களின் வேதனையை
எப்படி சொல்வது?
ஒரு நிமிடத்தில்
எடுத்த முடிவுக்காய்
ஆயுள் தண்டனை?
அந்த ஆண்டவனுக்குக் கூட
அடுக்காதா ?
ஏன் வருகிறது
மழைக் காலம் ?



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# மழை

குடையின்றி நடக்கையில்
மழையை மறைக்க முன்வராத
வசைபாடிச் செல்பவன் குடைமேல்
அழுது கோவமுறுகிறது மழை

யாரையெல்லாம் நனைத்துவிடும்
இம்மழை
யாரும் இல்லையென உறங்குகிறது
சுருங்கிய குடைக்குள்



மொத்த மழையையும் ஆட்கொண்ட
பள்ளத்திற்கு மிஞ்சி நிற்கிறது
இழுத்து அணைக்கும்
மிஞ்சிய வானத்தின் மிச்சங்கள்

கரையை முட்டிவிளையாடும்
மீனின் இதழோடு
சொட்டெனும் முத்தமிட்டு
சென்று வா என்கிறது
மழையை குடித்த மரத்தின் இலைகள்

உடை நனைந்த பெண்ணுக்கு
மேன்மேலும் சலசலப்பை
மறைக்க பொழிகிறது வான்மழை
துடைத்து துடைத்து மீண்டும் பொழிகிறது கனமழை

சாலையில் உறங்கிய மழைத்துளிகளெல்லாம்
வெண்மையை பார்த்தவுடன் காரி உமிழ்கின்றன

ஒரு துளி
சிறு குளம்
பெரும் நீரோடை
இப்போதைக்கு மழை.

கவிஞர் சே கார்கவி கார்த்திக்

# புத்தகம்

புரட்ட புரட்ட பக்கங்கள்
படிக்க படிக்க பட்டங்கள்
சிறுசிறு கதைகள்
சிந்தனையான வரிகள்
நேரம் போவது கூட தெரியாமல்
ரசித்து படித்த கதைகள் பல
வாசித்து பழகினால்
வாழ்க்கைக்கு நல்லது
புத்தகத்தை பார்ப்போம்
புதையலாக.



கவிஞர் ப.ஜெகதீஸ்வரி,ஒ.தண்டரை

# இன்பம் தேடி

துன்பங்களைக் கடந்து
இன்பங்களைத் தேடுவோம்
தேடிக் கொண்டே இருப்போம்!
தேடித் தேடித் தொலைத்திடுவோம்
துன்பங்களை!

பூக்களை ரசிப்போம்!
மழலையைக் கொஞ்சுவோம்!
வார்த்தைகளில் இனிமை
சேர்த்துப் பேசிட
இன்பங்கள் யாவும்
தேடி வந்திடுமே
நமது காலடியில்!



இசையில் மகிழ்வோம்!
இறையைத் தேடுவோம்!
மனப் பாரங்கள் யாவும்
அவன் காலடியில் இட
நம் பாரங்களும் குறைந்து
மனமும் லேசாகிடுமே!

ஓர் அறைக்குள் முடங்கிக் கொள்ளாமல்
அனைவருடனும் கலந்து பேசிட
அவர்கள் வார்த்தைகளிலும்
உனக்கான செய்தி இருக்குமே!

இறுக்கம் தவிர்ப்போம்!
இன்பம் சுமப்போம்!
இனிப்பாய் வாழ்வோம்!

கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# இளைப்பாறும் இதயம்

துள்ளும் மனதில்
துளிர்க்கின்ற ராகங்கள்
எதுவும் வேண்டாம்
நீள்கின்ற பாதையும்
உந்தன் பாதச் சுவடுகளின்
வரித்தடத்தில்
வேண்டாம் வேண்டாம்

இணைந்தே செல்வோம்
நெடுநாள் ஆசையொன்று
நெஞ்சுக்குள் நீங்காமலே

வானக்கூரை நகரும் நம்மோடு
வில்லேந்தும் விழிமட்டும்
மௌனத்தில் நனைந்தபடியே



பூந்தென்றலில் முத்தங்கள்
கிசுகிசுக்கும் மென்மையும்
புகுந்தாடி செல்லும் புறம்பேசாது

வெகுதூர நடையில்
இலக்கணம் இசைத்திடும்
என்னவென்பேன்

பேசவில்லை பேசிக்கொண்டன
மனங்கள்
இதழ்கள் தீண்டவில்லை
இனிப்பானதொரு ஒற்றல்

உரசாத விரல்கள் கூட
ஓவியம் தீட்டியது
நெடுநாள் கனவின் தீண்டல்
இளைப்பாறும் இதயங்கள்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# விதியெழுதிய பக்கங்கள்

ஏதோவொரு பக்கத்தில்
குமையும் தீயை அணைக்கும்
காற்று எத் திசையில் வரும்

ஆவியாகிப் போயினும்
இட்லிச் சட்டிக்குள்
அடங்கிப் போனது
திசைக்கொரு பார்வையில்
கழண்டு போகும்

காற்றுக்கும் சிறகுண்டு
காவியத்தில்

பேசிக் கொண்டாடும்
காற்றின் சுதந்திரம்
கடலடி மண்தொட்டு
ஒளிந்து வாழ்கிறது

ஏதோவொரு கதைகளில்
வடித்த கஞ்சியின்
ஆடை போன்றே
வீணாகிப் போகும்
விதியெழுதிய பக்கங்களில்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கண்ணனின் புல்லாங்குழலிசை

வண்டு துளைத்த மூங்கிலின் ஓசை - தினம்
கேட்டு ரசிக்க எனக்கும் ஆசை
தேடல் வேண்டாம் ஏது? எந்த திசை
குழலோசை பேசுமே பல பாஷை

தாய் மடியாய் எனை வந்து தாலாட்டும்
தலைவனாகி எனையாளக் கவி தீட்டும்
கேட்காமல் சிலநேரம் வலி கூட்டும்
கோதை இவள் நெஞ்சந்தனை நிதம் வாட்டும்

யார் கண்டீர்? கார்குழல் கண்ணன் தோற்றம்
கண்டநாள் முதலே ராதையின் மனமாற்றம்
நேரம், காலம் எது? மறந்தாள் சுற்றம் - இனி
கோதையுடல் குழல் போதையிலே வற்றும்

காற்றிலேறி செவிவழி புகும் அது
காத்து நின்றவளுக்குள் ஊறும் காண மது
இனி இமைப்பொழுதில் மலர்வாள் மாது
இது போதும் தேவை வேறு ஏது

தவமாய் தவமிருந்தாள் யசோதை
பூத்தொடுத்த வண்ணம் இங்கு பூங்கோதை
பதிலுக்காக காத்திருக்கிறாள் ஒரு ராதை
சொல்லு கண்ணா! என்று நம் தை?



கவிஞர் ச.நந்தினி

# இனிய திருமண நாள் நல்வாழ்த்துகள்

பாரம்பரியம் சுமந்து
மரபுபோற்றும்
என் திருமாங்கல்ய சரடு
தாங்கிய
புனித அட்சதைகள்
ஆசீர்வதிக்கின்றன
நமக்கான நன்னாளை

ஆண்டவன் கொடுத்த
அழகிய கடமைகளில்
உன் புன்னகைக்கு
பொறுப்பானவள் நான்



பரிசளிக்கிறேன்
வயதுகள் தீண்டா
காதலையும்
வாழ்வையும்

உறவின் உயிரே
இனிய திருமணநாள் நல்வாழ்த்துகள்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அன்பெனும் ஆயுதம்

அன்பை கொடுக்க நேரமில்லை அவசர உலகத்தில்
மறைத்து வைத்தே அன்பை அறியச்சொல்லி நகைக்கும்
பணம் கண்டே பல் இளிக்கும்
சிலரது அன்பு.
பூட்டி வைத்த இதயத்தை திறந்து
புன்னகை ஒன்றை உதிர்த்து பார்
மறந்து போகும் அத்தனை பாரங்களும்
அன்பு ஒன்றே பெரிதென
அருமருந்தாக கொடுத்திட ஆயுளும் அதிகரிக்கும்
அனுசரணையாய் கைகொடுக்கும் அன்பில்
ஐந்தறிவு விலங்கும் உறவாகும்
அன்பை எதிர்பார்க்கும் இதயத்தை
உதாசீனம் செய்யும் உலகம்
கிடைக்காத ஒன்றுக்கு ஏங்கும் மனதை
கிடைத்ததை ஏற்று உறுதிபடுத்தும்
இந்த அன்பெனும் ஆயுதம்.



கவிஞர் குணசுந்தரி சிவா,காஞ்சிபுரம்

அகர முதல இலக்கிய பேரவை
அகழும் தமிழே! முதலும் தமிழே!!

# மாலவனும் வைணவமும் (பகுதி II)

## திருமழிசை ஆழ்வார்

கச்சிநகர் திருவெஃகா மால்தொண்டில் மழிசையார்
கணிகண்ணனொடு தங்கியகால் வாழ்குடிலை தூய்மைசெய்
மூதாட்டி முழுச்சேவை ஆற்றும்வகை என்றுமிளமை
எய்துவகை மழிசையார் அருளிட்டார்! ஈதறிந்த
மன்னவனும் தனக்கிளமை பேறுநல்க மழிசைக்கே
பரிந்துரைக்க கணிகண்ணன் தன்றனுக்கு ஆணைதனை
பிறப்பித்தான்! மூதாட்டி இளமங்கை ஆனபின்னர்
அவளழகில் ஈர்ப்புண்ட மன்னவனும் மணந்தானே!
நாரணர்க்கு அல்லாது நரர்க்குத்தாம் தொண்டாற்றல்
அல்லரென மறுத்தானே! தன்பெயரில் ஓர்கவிதை
பெற்றுத்தர உத்தரவை இட்டானே! மால்தன்னை
போற்றுநாவால் மானிடரைப் போற்றாரென உரைத்திட்டான்!
வெஞ்சினத்துப் பல்லவரா யமன்னன் நகர்விட்டு
வெளியேற கணிகண்ணர்க் காணைதனை பிறப்பித்தான்!
மழிசையார் பெருமாள்சேர் தாயாரொடு நகர்நீங்கி
ஓரிரவு இருக்கைதனைச் சேர்ந்தாரே! நகரதுவோ
பொலிவிழந்தது! அரசியொடு நகர்மக்கள் புடைசூழ
மன்னித்து நகர்த்திரும்ப வேண்டினனே! செல்லுங்கால்
திரும்புங்கால் சொன்னவண்ணம் செயல்பட்டதால் எதோக்தகாரி
ஆனாரே! பெருமாளோ தொண்டர்தம் உள்ளத்து
ஒடுக்கமெனல் மழிசையார் நிகழ்வதனால் உணர்வோமே!
ஸ்ரீவைஷ்ணவ க்ஷேத்திரங்கள் நூற்றெட்டில் இரண்டுமட்டும்
மழிசையார் தாம்தனித்து மங்களாசா சனம்செய்தார்!
கபிஸ்தலமும் அன்பிலுமே மற்றோர்தம் கூட்டோடு
புகழ்பாடிய பதினொன்று அவைகாண்போம்! திருவூரகம்
அல்லிக்கேணி திருப்பேர்நகர் திருக்குறுங்குடி திருவெஃகா
திருப்பாடகம் திருக்கோஷ்டியூர் கும்பகோணம் திருவேங்கடம்
திருப்பாற்கடல் போன்றவையே! மாலவனின் மாண்பக்தர்
வைணவத்தின் சீர்பரவும் மழிசையார் போற்றியே!



தொடரும்

கவிஞர் கனைக்காயன் (இ.சே.இராமன்)


# நானும் அவனும்

நீளும் பயணத்தில்
இடை நிறுத்தி
இரசிக்கும் சின்ன பிழவுகள்.

பிறையும் பிரிதொன்றாய்
நகலெடுத்து கடலோடு கலக்க.
பாதம் நனைத்து
பணிவாய் ஓடும் அலைகள்.

முற்று யாதென விளங்கா
நொடிமுள் கடத்தலில்.
சிறையென அறியா
கடந்த நொடிகள் எந்த கணக்கோ.

செழித்த தேகத்தில்
சுற்றம் தூத்தி நிகழ்த்த.
சுயமென ஒன்றுமில்லா பிறவியாய்
மனம் வருத்த.



வலிகள் அகத்தை பகீரகிக்க
பிடித்தமான பாடல் வரிகளும்
சொல்லாத கதையை நினைவில் புகட்டி
நிசப்த நடத்தையில்

ஆயிரமாயிரம் எண்ண அலையிலேயே
பாதச்சுவட்டில் பதிந்த விழிப் பார்வை.
புணரியும் பார்வையில் விழா
சீகரமும் நனைத்திடா.

அகம் சூடேற
அக்கறையாய் கரம் தழுவ
ஓர் உயிர் வேண்டும்.
காதல் வடிவில் என்னவன் தாங்கிட
நானும் மடிந்தேன் மடியோடு.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# நடக்குமா நாளை?

பிறக்கும் தேதி குறிக்கும் விஞ்ஞானம்
இறக்கும் தேதி குறிக்குமா?

இறக்கும் தருணம் கிடைக்கும் ஞானம்
பிறக்கும் போதே கிடைக்குமா?

உருவம் கொண்டு உடலிருக்கையில்
உருவம் கொண்ட உயிர் கிடைக்குமா?

முகம் காட்டும் கண்ணாடி போல்
மனிதமனம் காட்டும் கண்ணுண்டா?

இளமை முதுமை எனத் தொடரும் காலம்
முதுமை இளமையென முடியாதா?

கருவுக்குள் நானிருந்த ஞாபகங்கள்
கல்லறைக்குள்ளும் வராதா?




கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு (இலங்கை)

அகர முதல

# சாளரக்காட்சிகள்

வாழ்க்கை எனும் பயணத்தில்
அனைவரும் பயணிகள்தான்
சிலர் நம்முடனே பயணிக்கலாம்
நெடுந்தூரம்
சிலரோ விடைபெறலாம்
விரைவாகவே
ஆனால்
உங்கள் பயணத்தில்
யாருக்காகவும்
இரசிக்கத்
தவறிவிடாதீர்கள்
உங்களுக்கான
சாளரக்காட்சிகளை.



கவிஞர் கீர்த்தனா பு,திருப்பூர் மாவட்டம்

# ஹைக்கூ




கவிஞர் லா.பெனிஸ்,நெல்லை

# குடும்பமாவது யாதெனில்

புள்ளிகளும் கோடுகளும் வளைவுகளுமே கோலமாகிறது
மேடுகளும் பள்ளங்களும் சேறும் சக்தியுமே பாதையாகிறது
நெளிந்தும் குறுகியும் செல்வதே பயணமாகிறது
இன்பமும் துன்பமும் குழப்பமும் நிறைந்ததே குடும்பமாகிறது

அம்மா அலுப்பில்லாமல் அடுப்பாங்கரையில் உழன்றால் தான்
அன்றாடம் அட்டகாசமான உணவு கிடைக்குது
அப்பா அலட்டிக்காமல் வெளியே உழைப்பதால் தான்
அழகாய் நாளும் உடுத்திட முடியுது

எல்லாருக்க்கவும் எல்லாரும் வாழ்வதே இல்லமாகுது
எடுத்ததிற்கெல்லாம் கோபப்பட்டால் உறவு என்னாவது
வளைந்து போவதால் தாழ்ந்து போவதில்லை
வளைந்து செல்லும் நதியின் அழகே தனிதான்

நிமிர்ந்து நின்று அடியோடு சாய்வதைவிட
வளைந்து கொடுத்து வெற்றி அடையலாமே
தவறுகள் திருத்தப்படவே தண்டனை என அறிவோம்
அடிக்கிற கைதான் நம்மை அணைக்கும்

மன்னித்துக் கொண்டே இருப்போம் மனம் மாறும்வரை
மரணிப்பதற்கு சற்று முன் மாறினவருமுண்டே
மற்றவருக்காக வாழ்வதே மானிட பிறப்பு
குடும்பத்திற்காய் தன்னை அர்ப்பணிப்பதே சிறப்பு

தாவரங்கள் கூட தனக்காகவே வாழ்வதில்லை
மேய்ந்து செல்லும் ஆடுகளும் நன்றி நவில்வதில்லை
இயற்கையின் படைப்பு எதையும் எதிர்பார்ப்பதில்லை
குடும்ப சண்டைகள் ஏதும் காட்டில் இல்லை

மானுட மனதுதான் எதிர்பார்த்து ஏமாறுது
அநியாயமாய் குற்றம் சாட்டப்படுகையில் கூனிக் குறுகுது
எரிமலையாய் வெடித்திடத்தான் மனது குமுறுது
நிதானம் என்பதெல்லாம் ஓடியே போகுது


கடவுள் தந்த உறவுகள் கண்ணாடியை போல
கண்ணாய் காப்போம்
கைநழுவாமல் பிடித்துக்கொள்ளும்



கவிஞர் பி.ரோஜாராணி,தேனி

# கவலை

நரித்தனங்கள் செய்திட
நாலாப்புறமும் அலையும்
சிரித்த முகமாய்
சலனத்தைக் கொடுக்கும்
விரித்திடும் வலையை
விழுங்கத் துடிக்கும்
கரிமுக உருவமாய்
கனத்தைக் கொடுக்கும்



தீர்வு

மூலப்புற்றுப் பாம்பை
முடுக்கி விட்டிட
உச்சிக்குச் சென்று
சுழன்று வருமே
தவமாய் தவமிருந்து
தனித்திரு விழித்திரு
சீவனுள் இருக்கும்
சிவனை உயிர்த்திடு
மனமும் இலகுவாகும்
தினமும் மகிழ்வாகும்.

கவிஞர் செ.இலட்சுமணக்குமார்,ஈரோடு

# அந்த 17 நாட்கள்!

நவம்பர்த் திங்கள் பன்னிரண்டாம் நாளன்று
காலையில் நாட்டையே உலுக்கியது இந்நிகழ்வு!
சில்க்யாரா பர்கோட் சுரங்கப்பாதை தோண்டுகையில்
சிக்கினர் நாற்பத்தியொரு தொழிலாளர்கள் மண்சரிவால்!
பயணநேரம் குறைப்பதற்கு தம் உயிரைப்
பணையம் வைத்துப் பணியாற்றிய தொழிலாளர்கள்
சுரங்கத்துள் சிக்கியதால் துடித்தனர் உறவினர்கள்!
இராட்சச இயந்திரங்கள் துணையுடனே துளையிட்டு
விரைவாக நடந்த மீட்புப் பணிகள்!
மூன்று குழாய்களைத் துளையிட்டு செருகினரே!
உயிர்வளியும், உலருணவும் செலுத்திட இருகுழாய்கள்!
ஆறங்குலக்குழாய் வழியே சூடான உணவுகளும்
உள்ளிருப்போரைக் காணும்வகை உள்நோக்கியல் கருவியையும்
செலுத்தி அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டினரே!
நாற்பத்தேழு மீட்டர்கள் கடந்த நிலையில்
பழுதாயின இயந்திரங்கள்! பதைத்தன இதயங்கள்!
எழுச்சியுடன் இறங்கியது 'எலிவளை சுரங்கத்
தொழிலாளர்' படையொன்று! எஞ்சியுள்ள பதின்மூன்று
மீட்டர் தூரத்தை இருபத்தொரு மணிநேரத்தில்
தடையின்றித் துளைத்தெடுத்து குழாய்களை நுழைத்தனரே!
திறமைமிக்க எலிவளைத் தொழிலாளர்கள்
நாற்பத்தியொரு உயிர்களைக் காத்து சாதனை
படைத்தனரே! அனைவரையும் மீட்டெடுத்த ஆனந்தத்தில்
திளைத்தது நம்தேசம்! களிப்பில் உறவினர்கள்!
மனமுருகி வேண்டிய அனைவரும்மகிழ்ந்தனர்!
காரணங்களை ஆராய்ந்து இத்தகைய விபத்துகள்
நேராவண்ணம் தக்கதொரு வழிமுறையை வகுத்திடுவோம்!
மனிதநேயத்தோடு பணியாற்றிய மீட்புப் படையினரை
நன்றியுடன் வாழ்த்துவது நம்முடைய கடமையன்றோ?
இன்னுயிர்களைக் காத்த வீரர்கள் நீடுவாழ்க!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# சிறுநீர்

நின்று கொண்டே போனால் தொலைத்தேன்
உட்கார்ந்து போ என்றேன் மகளிடம்

நின்று கொண்டே போப்பா பரவாயில்லை
உட்கார முடியவில்லை என்றால்
என்கிறாள் மகள் என்னிடம்

இடைப்பட்ட வாழ்தலில் என்னவோ?



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்,கும்பகோணம்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -13 கண்களில் நீர்



ரயில்வே ஸ்டேஷனுக்குள் மும்பை நாகர்கோவில் எக்ஸ் பிரஸ் நுழைய பிளாட் பாரத்தில் நின்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு ரயிலுக்குள் ஏறினார்கள்.

டீ குடித்துக் கொண்டு நின்றிருந்த சிவாவும் திவாகரும் ரயில் வருவதைப் பார்த்ததும் வேகமாக திவ்யாவை இழுத்துக் கொண்டு புவனா இருந்த இடத்திற்கு வந்து கொண்டுவந்த பொருட்களைத் தூக்கிக் கொண்டு ரயிலில் ஏறினர்.

ரயில் புறப்படுவதற்கான அறிகுறியாக பச்சை விளக்கு எரிந்தது. பின்னாலிருந்து ரயில் ஓட்டுனர் பச்சைக் கொடியை காட்டி விசில் ஊத இரயில் புறப்பட்டது.

ரயில்வே நிலையத்தில் பரபரப்பு கூடியது. சிலர் சிரித்து வழியனுப்பிக்கொண்டும், "போனதும் உடனடியாக கடிதம் போடு" என்றும் "பம்பாயில் இறங்கியதும் போன் பண்ணு" என்றும் ஒரே அவியல் குரல்கள் தவித்துப் போய் அலைப் பாய்ந்து கொண்டிருந்தது.

"ரயில் கிளம்ப ஆரம்பித்து விட்டது புவனா. தம்பி ஏற்கனெவே மும்பையில் இருந்தவன் என்றாலும் உங்களோடு அதிகமாக தங்க அனுமதிக்க வேண்டாம். புது இடம். கவனமாக இரு. போன உடனே எனக்கு அங்குள்ள விவரங்களை எழுது" என்று புவனாவின் கையைப் பிடித்துக் கொண்டாள் ராணி.

அம்மாவைப் பிரியப் போகிறோம் என்ற துக்கம் நெஞ்சிலடைக்க பேச முடியாமல் கண்களில் நீர் தழும்ப ராணியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள் புவனா.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -13** **கண்களில் நீர்**

"அத்தா ஏன் அழறே" திவ்யா புவனாவின் கண்களைத் துடைத்து விட்டாள். "ஒன்றுமில்லேம்மா. பாட்டியைப் பிரிந்து போறோமில்லியா அதனால தான்" என்றாள் புவனா.

"திவ்யா கண்ணு அத்தை கூட சமத்தா இருக்கனும்" என்று திவ்யாவின் கன்னத்தைத் தடவினாள் ராணி.

"சரி பாட்டி அத்தா அழுதா எனக்கும் அழுகை வருது" என்ற திவ்யாவின் முகம் சுருங்கியது.

ரயில் மெதுவாக கிளம்ப "சரி அத்தை போயிட்டு வாங்க. அப்புறம் பார்க்கலாம். லட்டர் போடுகிறோம்" என்று கையாட்டினான் சிவா.

திவாகரும் "சரி அம்மா போயிட்டு வர்றோம்" என்று கையாட்டினான். ரயிலின் வேகம் அதிகமாக எல்லோரும் கையாட்டினார்கள். ரயில் பிளாட் பாரத்தை விட்டு ஒதுங்கி வேகமாக ஓட ஆரம்பித்தது.

புவனா அவளை அறியாமல் திவ்யாவை கட்டிப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்த நிலையிலே தூங்க ஆரம்பித்தாள். "புவனா இந்த சீட்டிலே கால் நீட்டிப் படுத்துத் தூங்கு. நேற்று ராத்திரி முழுவதும் தூங்கவுமில்லை. உடம்பு என்னத்துக்கு ஆகும். டிபன் சாப்பிட்டு விட்டு படுத்துக் கொள்கிறாயா?" சிவா வாஞ்சையோடு கேட்டான்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள். தம்பிக்கும் திவ்யாவிற்கும் வாங்கிக் கொடுங்கள்" என்று படுத்துக் கொண்டாள்.

திவ்யாவும் அவளோடு படுத்துக் கொள்ள, சிவாவும் திவாகரும் டிபன் சாப்பிட்டு விட்டு பார்சல் வாங்கிக் கொண்டு திரும்பிய போது டிக்கெட் பரிசோதகர் புவனாவிடம் டிக்கெட் விசாரித்துக் கொண்டிருந்தார்.

நல்ல தூக்க கலக்கத்தோடு டிக்கெட் எடுத்துத் தந்த புவனா "என் கணவரும் மைத்துனரும்..... சாப்பிட போயிருக்காங்க" என்றாள்.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

## அத்தியாயம் -13 கண்களில் நீர்

திவாகரும் சிவாவும் சீட்டிற்கு வந்து சேர "இந்த இரண்டு சாக்குப் பைகளும் உங்களதுதானே?" என்று கேட்டார் டி.சி.

"ஆமாம்." என்றான் சிவா.

"லக்கேஜ் கட்டியிருக்கிறீர்களா?"

"எதற்கு லக்கேஜ் கட்ட வேண்டும். நாங்கள் மூவர் பயணம் செய்கிறோம். மூன்று வயது கடக்கும் பெண்ணிற்கு அரை டிக்கெட் எடுத்துக் கொண்டுதான் வந்திருக்கிரோம். அதே அளவு தான் சாமான்களும் கொண்டு வந்திருக்கிறோம்" கோபத்துடன் சொன்னாள் புவனா.

"என்ன இருக்கிறது பைகளில்"

"ஒன்றில் தேங்காய் இருக்கிறது. மற்றொன்றில் முருங்கைக் காய்"

"வியாபாரமா?"

"நான் அங்கு காய்கறி வியாபாரம் செய்கிறேன்." என்றான் சிவா.

"தேங்காய் மூட்டை மட்டுமே நூறு கிலோ தாண்டும் போல இருக்கிறதே. கண்டிப்பாக பைன் கட்ட வேண்டியதிருக்கும்"

"நாங்கள் ஏன் பைன் கட்ட வேண்டும். எடை போட்டுத்தான் எடுத்து வந்திருகிறோம்." என்றாள் புவனா.

"அம்மா கண்டிப்பாக எடை அதிகமாக இருக்கும் என்பதனால்தான் நான் உங்களை பைன் கட்டச் சொல்கிறேன்" என்றார் டி.சி.

"கொஞ்சம் பணத்தைக் கொடுத்து அனுப்பி வைங்க அத்தான்" சிவாவிடம் திவாகர் கிசு கிசுத்தான்.


அதைக் கேட்ட புவனா "எதற்கு பணம் கொடுக்க வேண்டும். நீங்கள் எங்கே இறக்கி எடைப் போடச் சொல்கிறீர்களோ அங்கே நாங்கள் எடை போட தயாராக இருக்கிறோம். அது வரை ரயிலை நிறுத்தி வைக்க வேண்டிய பொறுப்பு உங்களுடையது" கடுமையாக புவனா சொன்னதைப் பார்த்து கூட அமர்ந்திருந்த பயணிகள் அசந்து போனார்கள்.

தொடரும்

இரஜகை நிலவன்

# பவனந்தி முனிவர்

**கட்டுரை**



பவணந்தி முனிவர்

தொல்காப்பியத்தின் வழிநூல் நன்னூல். இன்றுவரை செந்தமிழுக்கான இலக்கணமுறை நன்னூலைப் பின்பற்றி உள்ளது. தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்டு நன்னூல் என்னும் இலக்கண நூலை அழகுற படைத்தளித்தவர் பவனந்தி முனிவர் எனும் அமுதசாகரர் ஆவார்.

இவர் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் இந்நூலை இயற்றினார். தொல்காப்பியத்திற்கு அடுத்தபடியாகத் தமிழுக்கும் தமிழருக்கும், மங்காத பேரையும் புகழையும் இம்மாபெரும் மண்ணுலகில ஈட்டித்தந்தது இந்த நன்னூல் ஆகும்.

நன்னூலைச் செய்த பவனந்தி முனிவர் தொண்டை மண்டலத்தைச் சார்ந்த, சனகாபுரத்தில் வாழ்ந்தவர். சன்மதி முனிவரின் மாணாக்கர், சமணசமயத்தவர் என அறியப்படுகிறது.

## பிறப்பு, காலம்

பவணந்தி முனிவர் பிறந்த ஊர் பொன்மதிற்சனகை என்று சிறப்புப் பாயிரம் பொதுவாகக் குறிப்பிடுகிறது. சனகை என்பதற்குச் சனநாதபுரம் என்று மயிலைநாதரும் சனகாபுரம் என்று சங்கரநமச்சிவாயரும் விளக்கம் கூறியுள்ளனர். பவணந்தி முனிவர் பிறந்த சனகாபுரம் சோழசிங்கபுரத்தைச் சேர்ந்த ஊர் என்று தொண்டை மண்டல சதகமும், ஈரோடு வட்டத்தில் உள்ள ஊர் என்று கொங்கு மண்டல சதகமும், மைசூர் மாநிலத்தில் உள்ள நசரபுரம் அருகிலுள்ள ஊர் என டாக்டர் உ.வே. சாமிநாதையரும்

அ வில்சன்,இதழாசிரியர்

# பவனந்தி முனிவர்

கட்டுரை

மைசூர் மாநிலத்தில் உள்ள நசரபுரம் அருகிலுள்ள ஊர் என டாக்டர் உ.வே. சாமிநாதையரும் கருதினர். பவணந்தி முனிவர் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் சிற்றரசனாக விளங்கிய சீயகங்கனால் புரக்கப்பட்டு, அவர் வேண்டுகோளுக்கு இணங்க நன்னூல் எழுதினார். மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலம் கி.பி. 1178 - 1218 ஆகும். எனவே சீயகங்கன் ஆட்சி செய்த காலத்தையே பவணந்தியார் வாழ்ந்த காலமாகக் கொள்ளலாம். நன்னூலுக்கு பவணந்தி எழுதிய சிறப்புப் பாயிரம் மூலம் இச்செய்தி அறியவருகிறது.

திருந்திய செங்கோற் சீய கங்கன்
அருங்கலை விநோதன் அமரா பரணன்
மொழிந்தன னாக முன்னோர் நூலின்
வழியே நன்னூற் பெயரின் வகுத்தனன்
பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள்
பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி
என்னு நாமத் திருந்தவத் தோனே.



பவணந்தி முனிவரின் வாரிசு — பவணந்தி முனிவரின் சிலை

ஆதிநாத குரு விளங்கும் சனகாபுரி என்ற வரிகளால் பவணந்தி ஜைன மதத்தைச் சேர்ந்தவர் என்றும் அறியப்படுகிறது. ஜைன மதத்துத் துறவியருக்கு நந்தி என்ற நாமம் சூட்டப்படுவது வழக்கத்தில் இருந்தது.

## நன்னூல்

பவணந்தி முனிவர் காலத்தில் தொல்காப்பியத்தின் சில பகுதிகள் வழக்கொழிந்தன.


அ வில்சன்,இதழாசிரியர்

# பவனந்தி முனிவர்

கட்டுரை

## நன்னூல்

பவணந்தி முனிவர் காலத்தில் தொல்காப்பியத்தின் சில பகுதிகள் வழக்கொழிந்தன. சில பகுதிகளுக்கு விளக்கம் தேவைப்பட்டது. ஓர் இலக்கண நூலுக்கான தேவை ஏற்பட்டது. தொல்காப்பியத்தில் வழக்கொழிந்த பயன்பாடுகளுக்கு பொருத்தமான சமகாலப் பயன்பாடுகளை வகுத்தும் ஏற்கனவே வகுக்கப் பெற்ற பயன்பாடுகளை மேலும் விளக்கியும் பவணந்தி நன்னூலை எழுதினார். தொல்காப்பியம் கண்ட இலக்கணத்தைப் பின்பற்றி சமகாலத்தில்இருந்த மொழியையும் நினைவில் கொண்டு சுமார் 17 நூற்றாண்டுகால இடைவெளியை நிரப்பிய நூல். தற்காலம்வரை, செந்தமிழுக்கான இலக்கணமுறை நன்னூலைப் பின்பற்றியே உள்ளது. பார்க்க நன்னூல்




நன்னூலில் 462 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 7 நூற்பாக்கள் தொல்காப்பியத்தில் இருந்து எடுத்தாளப்பட்டவை. பாயிரம் நீங்கலாக 5 அதிகாரங்கள் இருந்தன என்றும் 3 அதிகாரங்கள் தொலைந்து போனதாகவும் கருதப்படுகிறது.

அகத்தியம், தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைக் கொண்டு நன்னூலைச் செய்தார் என்றும், நன்னூல் அக்காலத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணம் உடையதாக இருந்ததென்றும் சான்றோர்கள் கூறுவர்.

அ வில்சன்,இதழாசிரியர்

# பவனந்தி முனிவர்

கட்டுரை

எவ்வாறாயினும் தமிழ் மொழியும் தமிழ் இனமும் இத்தரணியில் மங்காச் சிறப்பும், மறையா புகழும் பெற்றுத்தரக்கூடிய நன்னூலை இயற்றிய பவனந்தி முனிவரின் புகழ் உலகில் மங்காமல் ஒளியெனத் திகழும்.

நன்றி : தமிழ் வளர்த்த தமிழ்த்தொண்டர்கள், டாக்டர் அறிவுச்சுடர்.
விக்கிபீடியா,
இந்து தமிழ் திசை

அகர முதல



அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
உனக்கென்று படைக்க பட்ட
எதுவும் உன்னை விட்டு வேறு
யாருக்கும் போகாது நீ தான் அதை
முயன்று போராடி வெல்ல வேண்டும்.
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:
9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com